முருகப்பெருமான் துணை

**மகான் யாகோபு சித்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

13.01.2023, வெள்ளிக்கிழமை

1. பல்வேறு அவதாரம் ஞானியர்கள்
பாருலகை காக்க நிகழ்த்தியிருக்க
நல்விதமாய் கலிகாலம் தேர்வுசெய்து
ஞானயுகம் படைக்க அவதாரம்

2. அவதாரம் எடுத்தநல் அரங்கனே
ஆறுமுகப் பெருமானின் சொரூபனே
அவதார நன்னாளாம் சுபகிருது சிலை திங்கள்
அருள்மிக்க இருபான்நவ திகதி புகர்வாரம்
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 29ம் நாள் 13.01.2023, வெள்ளிக்கிழமை)

3. வாரமதில் அனுகூல ஆசிதனை
வழங்குவேன் யாகோபு சித்தர் தானும்
சோரமின்றி உன் அவதாரத்தால்
செகமே புதுமை கண்டடையும்

4. அடையும் அனைத்தும் ஞானமாக
அழியாமை வரம் தன்னை
தடையறக் கொண்ட மக்கள் பலமாக
தவசியர் உன்னால் நிறைவேறும்

5. நிறைவேறும் எங்கும் நிம்மதி
நீதிவிட்டு அகலா செயல்பாடாக
அறத்தினை காக்கும் போற்றும்
ஆளுமைகளாக மாற்றம் கூடி

6. கூடியே அரங்கனுன் அவதாரம்
குவலயத்தை காப்பது உறுதி
நாடியே உன்னை சரணடைந்து
ஞானம் வேண்டித் தொடர்பவர்க்கு

7. தொடர்பவர்க்கு துன்பமான மாயை
தொலைந்து தெளிவு பிறக்கும்
திடமாக ஞானபலம் கைகூடி
தேசிகன் உன்வழி ஞானிகளாகும் வாய்ப்பு

8. வாய்ப்பும் அவதார நன்னாளில்
வரமாக உலகோர்க்கு கிட்டும்
அய்யமிலா அரங்கன் அவதார
அருமை பெருமை உலகறிய

9. உலகறிய சூட்சும மாற்றம் நிகழும்
உண்மைபட வாழ உண்டான
பழக்க வழக்கம் ஞானமாகத்தேறி
பாருலகில் தருமம் வளரும்

10. வளரும் மலரும் சன்மார்க்கமாக
வையகம் குளிரும் நல்மார்க்கமாக
பலரும் தானாக மனமாற்றம்
பகருவேன் அரங்கன் வழி கண்டு

11. கண்டுமே உலகையே மாற்றும்
கருணைமிக்க ஞானப்படைகளாக
தொண்டுவழி இணைந்து படைப்பர்
தேசிகன் மூலம் ஞானயுகம் அமையவே
அனுகூல ஆசிமுற்றே

–சுபம்–